Registered as a News Paper, பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 01 (16 12 1991) திங்கட்கிழமை ஓசை: 301

## தொழில் நுட்ப சான்றிதழ் வினாத்தாள்கள் வரவில்லை

ஆண்டு ஒன்று மாணவர்களுக்கான தொழில் நுட்ப சான்றிதழுக்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் இதுவரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை. நாளை மறுதினம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட மேற்படி பரீட்சைகளுக்கான வினாத்தாள்களை வடபகுதிக்கு அனுப்பி வைப்பது தொடர்பான ஆலோசனைகள் நேற்று கொழும்பில் உள்ள பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெற்றதாக தெரிகிறது. உரிய காலத்தில் இப்பரீட்சைக்கான வினாத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பரிசீலனையில் தொண்டாவின் திட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தேசியஇனப் பிரச்சினை சம்பந்தமாக அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது. அடுத்த மாதம் நடுப்பகுதியில் திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் வருமபொழுது இத்தீர்வுத் திட்டத்திலுள்ள யோசனைகள் பற்றி விடுதலைப் புலிகள் மேலும விளக்கங்களைக் கோரலாமெனவும் தெரியவருகிறது.

அமைச்சர் தொண்டமான் அனுப்பி வைத்த தீர்வுத்திட்டம் நேற்றுமுன்தினம் விடுதலைப்புலிகளின் தலைவர்களுக்கு கிடைக்கப்பெற்றது. இத்தீர்வுத்திட்டம் அமைச்சர் தொண்டமான் முன்னர் அனுப்பி வைத்த 13 அம்சத் தீர்வுத்திட்டத்தில் இருந்து விரிவாக்கம் பெற்றதாக அமைந்துள்ளது எனத் தெரிய வருகிறது.

தேவேளை இத்தீர்வுத் திட்டத்திலும் சில அம்சங்கள் விளக்கம் கோரவேண்டியவையாக இருப்பதால் அமைச்சர் தொண்டமான் அடுத்த மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வரும்போது இது குறித்து விடுதலைப்புலிகள் விளக்கம் கோருவர் எனத் தெரிய வருகின்றது.

## அமைச்சர் தொண்டமானை பணயக் கைதியாக பிடிக்க புலிகள் திட்டமாம்

### ராவய பத்திரிகையின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

அமைச்சர் எஸ். தொண்டமான் ஜனவரியில் யாழ்ப்பாணம் சென்றதும் அவரை விடுதலைப் புலிகள் பணயக் கைதியாக வைத்துக் கொள்வார்கள் என்று நேற்று வெளியான ராவய சிங்களப் பத்திரிகை முதன்மைச் செய்தி வெளியிட்டுள்ளது.

தொண்டமானைப் பணயக் கைதியாக யாழ்ப்பாணத்தில் வைத்துக் கொண்டு வடக்கு கிழக்கிலுள்ள சிறிலங்கா இராணுவத்தை வெளியேறுமாறு புலிகள் கோரவிருப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வெடிக்குண்டுக்கார் சார்க் மாநாட்டிற்காக நிறுத்தப்பட்டதாம்

(கொழும்பு)

கொழும்பில் வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட நிலையில் அண்மையில் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்ட மோட்டார் வாகனம், கடந்த நவம்பர் ஏழாம் திகதியன்று

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் நடத்தும் எண்ணம்; அரசாங்கத்திற்கு இல்லை

-பிரேமதாசா

சிறிலங்கா நாடாளுமன்றத் திற்கான இடைக்காலத் தேர்

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினால் அமுல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுகாலை ஆறு மணி முதல் நீக்கப்பட்டிருப்பதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று கொழும்பில் அறிவித்தது. இம் மாவட்டத்தில் க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நன்மை கருதியே இந்த ஊரடங்கு உத்தரவு நீக்கப்படுவதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்தது.

## இரு இளைஞர் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள மத்திய முகாம் பகுதியில் இரண்டு தமிழ் இளைஞர்களை சீருடை அணிந்த பொலிசார் கைது செய்தனர். உறவினர்கள் தேடிச் சென்ற போது மத்தியமுகாம் பொலிஸ் நிலையத்தில் ஏமக்கோதும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரப்பகுதியில் வாராந்தத் தேடுதல்

(வவுனியா)

வவுனியா நகரப்புறத்தில் உள்ள சகல குடிமனைப் பகுதிகளும் சிறிலங்கா இராணுவத்தினாலும், பொலிஸாராலும் ஒரு வாரத்திற்கொரு தடவை சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்படுகிறது.

இத்தேடுதல் நடவடிக்கைகளின் போது சந்தேகத்திற்குரியவர்கள் என்று கருதப்படுபவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

நகரில் உள்ள வீடுகளில் நிரந்தரமாக வசிப்பவர்களி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வைத்தியசாலை ராணுவத்தின் பாவனையில்

வவுனியா அரசாங்க வைத்திய சாலையின் ஒரு பகுதி இராணுவத்தினரின் சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா எல்லைப் பகுதிகளில் இடம்பெறும் யுத்த நடவடிக்கையின் போது, சிறிய காயங்களுக்குள்ளாகும் சிறிலங்கா படைவீரர் மட்டுமே இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

தினமும் சில வீரர்கள் ஒதுக்கப்பட்டுள்ள வார்ட்டின் ஒரு பகுதியில் அனுமதிக்கப்படுகின்றனர் என்றும் இதனால் வைத்தியசாலைப் பகுதி இராணுவத்தினால் கண்காணிக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (நி)

## ஒருவர் பலி

மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினர் புதைத்து வைத்த மிதிவெடியில் சிக்கி தமிழ்மகன் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த பதின்மூன்றாம் திகதி அரிப்பு என்னும் இடத்தில் நடந்த இச்சம்பவத்தில் சர்ணாந்து அமலன் (29) என்பவரே உயிரிழந்தவராவார். அவர் இரு குழந்தைகளுக்கு தந்தையான இளம் குடும்பஸ்தராவார்.

## அன்னை பூபதிஞாபகார்த்த பொது அறிவு தேர்வு

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி ஞாபகார்த்த 1992 ம் ஆண்டு பொது அறிவுத் தேர்வு நடாத்துவது பற்றி விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் அறிவித்துள்ளது.

இந்த தேர்வு அடுத்தாண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி நடைபெற உள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31-01-1992 ஆகும் என்றும் இந்த முடிவுத்திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டின் பொருளாதார நெருக்கடி; நல்லெண்ண குழுவிடம் புலிகள் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஆக்கிரமிப்பின் மூலம் தமிழ் மக்களின் தேசியபிரச்சினைக்கு

இரண்டு மணி நேர நீடித்த இப்பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசாங்கம்

தடைகளைப் பயன்படுத்தி புலிகளைப் பலவீனமாக்கியும், மக்களைப் பட்டினிச்சாவின் நெருக்

வேறெதுவும் பயன் புலிகள் விட்டுக் கொடுத்து வி... மாட்டார்கள் என்பதையும் இட

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்

[106,தர்மபாலா மாவத்தை, கொழும்பு 07]

உதவிப்பணிப்பாளர்

(நிவாரணம்)

மேற்படி பதவிக்கு விண்ணப்பப் படிவங்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தலைமை யகத்தினால் கோரப்படுகின்றன. மேலும் விப ரங்களுக்குஎமது பணிமனையுடன் 17.12.91க்கு முன்னதாக தொடர்பு கொள்ளவும்.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

இ. செ. சி. சங்கம் யாழ். கிளை

(B/3638)



வெளிநாட்டுத் தபால்களை

இன்றே ஒப்படைப்பீர்!

துரித தபால் சேவைக்கு

DHL WORLDWIDE EXPRESS

DHL

C/o Cosmos Marketing Services

120 (200), K.K.S. Road,

JAFFNA

(/3569)


## வரி விளம்பரம்


### வகுப்புகள்

G. C. E (A/L) Physics A/L 91 தமிழ் மீட்டல் வகுப்புகளும் மற்றும் 92,93 வருட பரீட்சைகளுக்கான வகுப்புகளும் தனித்தனியாகவும், சிறு குழுக்களாகவும் அனுபவம் மிக்க பட்டதாரி ஆசிரியரினால் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். தொடர்பு:- வசந்தம் புத்தகசாலை, 405 சிராவ்வி றோட், (பெற்றோலியம் கூட்டுத்தாபனம் முன்பாக) யாழ்ப்பாணம்.

(R/2005)

### இடமாற்றம்

தீவகத்திலிருந்து வந்துள்ள வேலணை புங்குடுதீவில் ஊர்தி சேவையாற்றிய பாசிபம் குழந்தைகள் வைத்திய சாலை தற்காலிகமாக கல்வியங்காட்டிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள இருபாலை சந்தி குமாரபுரம் இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. பாசிபம் வைத்தியசாலை

(R/1996)

### தேவை

நியாய விலை சந்தைக்கு பெண் விற்பனையாளர் தேவை சிறந்த கல்வித் தகைமை உடையோர் கிராம சேவகரின் நற்சான்று பத்திரத்துடன் நேரில் விண்ணப்பிக்கவும். திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். செனித் ஜோ. எக்கட்டன் 19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. மகளிர் கல்லூரிமுன் ஒழுங்கை சுண்டிக்குளி.

(R/2008)

### தேவை

ஆண், பெண், சிறுவர் உடைகள் தைப்பதில் அனுபவம் உள்ளோர் நற்சான்று அனுபவ பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். செனித் ஜோ-எக்கட்டன், 19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை சுண்டுக்குளி

(R/2009)


அன்னை

கொள்ளப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் மட்டும் பங்குபற்றக் கூடிய இந் நேர்வில் ஆண்டு 7 முதல் ஆண்டு 13 வரையான வகுப்பு மாணவர்களே தோற்ற அனுமதிக்கப்படுவர்.

### இரு இளைஞர்

தெரியாது என்று பதிலளிக்கப்பட்டது.

கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் 11 ஆம் கிராமவீதியால் சென்று கொண்டிருந்த சே. வரதராஜா (வயது 24) சீ. குமரவேல் (வயது 24) ஆகிய இரண்டு இளைஞர்களுமே கைகள் கட்டப்பட்ட நிலையில் அழைத்துச் செல்லப்பட்டதாக இச்சம்பவத்தைப் பார்த்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

### பணயக்

மதாக அச் செய்தி தெரிவிக்கிறது.

இச் செய்தி வவுனியா மாவட்டத்தின் விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர் ஒருவரிடமிருந்து தமக்குக் கிடைத்ததாக அச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

ராவய ஐ.தே. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அதிருப்தியாளர் சார்பு பத்திரிகை என்பது குறிப்பிடத்தக்கது.

### வவுனியா

நகரக்கொமாண்டரிடம் அனுமதி பெற்று குடும்ப அங்கத்தவர் விபரம் சமர்ப்பிக்கப்பட்டு எழுத்து மூலம் பதிவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனை உண்டு இந்த நியதியை மீறி, தற்காலிகமாகத் தங்குபவர்களும் பதிவு செய்யாதவர்களும் கைது செய்யப்படுகின்றனர்.

(தி)

### சார்க்

சார்க் உச்சிமாநாடு நடைபெறும் வேளையில் வெடிக்க வைப்பதற்காக தயார் செய்யப்பட்டு இருந்தது. இத்தகவலை இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே டைம்ஸ் நாளேடு வெளியிட்டுள்ளது. அதில் மேலும் சார்க் உச்சி மாநாட்டின் போது இவ் வாகனத்தை வெடிக்க வைக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டு இருந்தனரெனவும், குறித்த நேரத்தில் வெடிக்கக்கூடிய பதின்மூன்று கிலோ பிளாஸ்டிக் வெடி பொருள் வெடித்திருந்தால் அங்கு பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொழில் நுட்ப

தாங்கள் எடுத்து வரப்படாத பட்சத்தில் பரீட்சையை பின் போடப்படலாம் என்று கூறப்


சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

முன் ஒழுங்கையில் இயங்குகிறது

நியாய விலைச் சந்தை

உங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் நியாய விலையில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நயமான நம்பிக்கையான இடம்.

நிகர எடை நிதான விலை

தரமான பொருள்

இவற்றிக்கு நியாய விலைச்சந்தை

★ இன்றைய விசேட சலுகை சீனி 39/-

★ உணவுப் பார்சல்களும் உண்டு

விலை ரூபா 25/- மட்டுமே

நிர்வாக அமைப்பு (செனித் ஜோ - எக்கட்டன்)

(R/2006)



ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)


## நினைவு கூருகின்றோம்...

1991 - 12 - 16



### தேவதாஸ்

1986ஆம் ஆண்டு இலேசினத்தில் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடிச்சாற்றுப் பகுதியில் தேசத்துரோகிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

2ஆம்லெப். கஸ்கி (சாமித்தம்பி குணநாதன் - காரைதீவு, அம்பாறை)

யாழ். குருநகரில் எதிர்பாராத விதமாகக் கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த குருநகர்ப் பிரதேசப் பொறுப்பாளர்

தேவதாஸ் (ஜோசப் நாயகம் அன்ரன் தேவராஜா - 87, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்)

சில்ஸ் (நாகரத்தினம் நவரத்தினராஜா - இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்)

1987ஆம் ஆண்டு அம்பாறை, காரைதீவுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

லெப். விக்ரம் (சண்முகம் முத்துராசமன் - சேனைக் குடியிருப்பு, கல்முனை, அம்பாறை)

மன்னார், விடத்தல்தீவுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

2ஆம்லெப். முருகேசு (மருசால் நிக்கிலஸ் - கள்ளாட்டி, அடம்பன், மன்னார்)

இன்றே ஒப்படைப்பீர்!

துரித தபால் சேவைக்கு

DHL WORLDWIDE EXPRESS

DHL

C/o Cosmos Marketing Services
120 (200), K.K.S. Road,
JAFFNA

(/3569)



பெண் விற்பனையாளர்

தேவை சிறந்த கல்வித்தகைமை உடையோர் கிராம சேவகரின் நற்சான்றுப் பத்திரத்துடன் நேரில் விண்ணப்பிக்கவும். திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். செனித் ஜோ. எக்ஸ்ட்டன் 19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டிக்குளி. (R/2008)

தேவை

ஆண், பெண், சிறுவர் உடைகள் தைப்பதில் அனுபவம் உள்ளோர் நற்சான்று அனுபவ பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும் செனித் ஜோ-எக்ஸ்ட்டன், 19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை சுண்டிக்குளி

(R/2009)



ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

# விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)



# DIPLOMA IN NURSING

## புதிய பயிற்சி நெறி

ஆரம்பம்: 18 Dec. 1991

- 6 மாத காலப் பயிற்சி நெறி
- பிரபல வைத்தியசாலையில் ஒரு மாத கால செய்முறைப்பயிற்சி
- இலவச ஆங்கில வகுப்புக்கள்
- பார்மஸி பயிற்சியுடன் கூடியது
- பிரபல தகுதிவாய்ந்த வைத்தியர் குழு.

விபரங்களுக்கு

North Ceylon Technical Institute,
14, St. Peter's Lane,
Jaffna.

(B/36 34)


...வைய ஐ. தே. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அதிருப்தியாளர் சார்பு பத்திரிகை என்பது குறிப்பிடத்தக்கது.

**வவுனியா**

நகரசொரணிடமிடம் அனுமதி பெற்று குடும்ப அங்கத்தவர் விபரம் சமர்ப்பிக்கப்பட்டு எழுத்து மூலம் பதிவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனை உண்டு. இந்த நியதியை மீறி, தற்காலிகமாகத் தங்குபவர்களும் பதிவு செய்யாதவர்களும் கைது செய்யப்படுகின்றனர். (தி)

**சார்க்**

சார்க் உச்சி மாநாடு நடைபெறும் வேளையில் வெடிக்க வைப்பதற்காக தயார் செய்யப்பட்டு இருந்தது. இத்தகவலை இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே டைம்ஸ் நாளேடு வெளியிட்டுள்ளது. அதில் மேலும் சார்க் உச்சி மாநாட்டின் போது இவ் வாகனத்தை வெடிக்க வைக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டு இருந்தனரெனவும், குறித்த நேரத்தில் வெடிக்கக்கூடிய பதின்மூன்று கிலோ பிளாஸ்டிக் வெடிபொருள் வெடித்திருந்தால் அங்கு நொருக்க சேதம் ஏற்பட்டிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தொழில் நுட்ப**

தாங்கள் எடுத்து வரப்படாத பட்சத்தில் பரீட்சையை பின்போடப்படலாம் என்று கூறப்படுகிறது.


அதேவேளை மேற்படி பரீட்சைக்கு மாணவர்கள் அடையாள அட்டைகள் சமர்ப்பிக்க வேண்டியதில்லை என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது (க)

**புங்குடுதீவு**

சொண்டிகுருந்தபோது மர்மமான முறையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டார். பின்னர் இவரது சடலம் மோதலைக் கடலில் மறுநாளான புதன்கிழமை கண்டு பிடிக்கப்பட்டதாகவும் ஆட்களை வெளிநாட்டிற்கு அனுப்பும் தொழிலில் ஏற்பட்ட பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏற்பட்ட பிணக்கின் விளைவாகவே கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸ் விசாரணை மூலம் தெரிய வந்திருப்பதாக கூறப்படுகிறது.

இச் சிறுவனின் கடத்தலின் பின்னணியில் ஒரு பெண் இருந்ததாகவும் அவரை பொலிசார் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


1991 - 12 - 16



## தேவதாஸ்

1986 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினருடன் மட்டக்களப்பு, கஞ்சிகுடிச்சாற்றுப் பகுதியில் தேசத்துரோகிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

2ஆம்லெப். கல்கி (சாமித்தம்பி குகநாதன் - காரைதீவு, அம்பாறை)

யாழ். குருநகரில் எதிர்பாராத விதமாகக் கைக்குண்டு வெடித்ததில் சாவடைந்த குருநகர்ப் பிரதேசப் பொறுப்பாளர்

தேவதாஸ் (ஜோசப் நாயகம் அன்ரன் தேவராஜா - 87, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்)

சிலன் (நாகரத்தினம் நவரத்தினராஜா - இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு அம்பாறை, காரைதீவுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

லெப். விக்ரம் (சண்முகம் முத்துராசமன் - சேனைக் குடியிருப்பு, கல்முனை, அம்பாறை)

மன்னார், விடத்தல்தீவுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

2ஆம்லெப். முருகேசு (மருசால் நிக்கிலஸ் - கள்ளாட்டி, அடம்பன், மன்னார்)

லுக்மன் (சௌந்தரநாஜன் கொன்சன்டேவிற் - நானாட்டான், மன்னார்)

1988 ஆம் ஆண்டு அச்சுவாய், தாவடிப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளுடனான மோதலின் போது காயமுற்ற நிலையில் தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய

மோகன் (சோதிலிங்கம் சிவலிங்கம் - அச்சுவாய் தெற்கு

மன்னார், பண்டிவிரிச்சான் பகுதியில் எதிர்பாராத விதமாக எதிரியின் பொறிவெடியில் சிக்கி, பின் சயனைட் உட்கொண்டதில் சாவடைந்த

அன்னக்கிளி (பிரான்சிஸ் செபஸ்ரின் - செல்லையா புரம், பூநகரி, மன்னார்)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, புல்லுமலைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் சாவடைந்த

வசந்த் (சின்னத்தம்பி துரை - புல்லுமலை, மட்டக்களப்பு)

வேளையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட பெண்குழந்தை, தாய் மற்றும் ஒரு சிறுவன் உட்பட 4 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3635)

பாகிஸ்தானுக்கான

# அணுவாயுத ஏவுகணை உதவி ஆயுதப் போட்டியை தூண்டும்

## மாதவ் சிங்சோலங்கி

(டில்லி)

பாகிஸ்தானின் அணுவாயுத ஆற்றலுக்கும், ஏவுகணை தொழில் நுட்பத்திற்கும் வெளிநாடுகள் உதவி வழங்கினால் இந்தியாவின் பாதுகாப்புச் சூழல் பாதிக்கப்படும் என்றும், இப்பிராந்தியத்தின் ஆயுதப் போட்டியை அது தூண்டிவிடுமென்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் நடவடிக்கைகள் குறித்து சீன வெளியுறவு அமைச்சர் கியான்கீ சென்னையில் சந்தித்த இந்தியாவின் கவலையை தெரிவித்த மாதவ் சிங் சோலங்கி இதனைத் தெரிவித்தார்.

அணுவாயுத பரவல் தடுப்பு உடன்படிக்கை விஷயத்தில் இந்தியாவின் நிலையை விளக்கிய சோலங்கி அணு ஆயுத பரவல் உலகப் பிரச்சினை என்றும், இதனை பிராந்திய அடிப்படையில் தீர்க்க இயலாது என்றும் கூறினார்.

# சிறிலங்காவில் எவருக்கும் பாதுகாப்புக் கிடையாது - லலித்

(கொழும்பு)

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட "ஒப்பிரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கைகளை 'பிரயோசனமற்றன' என வர்ணிக்கும் ஜனாதிபதி பிரேமதாசா அந்த இராணுவ நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கிய டென்சில் கொப்பேகடுவையையும், விஜய விமலரட்ணவையும்தான் இப்போதும் வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகிறார்.

இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொழும்பில் நடைபெற்ற மனித உரிமைகள் தின கூட்டத்தில் உரையாற்றியபோது தெரிவித்தார்.

முன்னதாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா 'வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கையை "அது பிரயோசனமற்றது" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இராணுவ நடவடிக்கைகளையிட்டு ஜனாதிபதி இத்தகைய விமர்சனங்களை தெரிவிக்கக்கூடாது என்றும் லலித் அத்துலத்முதலி குறிப்பிட்டார்

அவர் மேலும் கூறியதாவது சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றி அரசு கவனமெடுக்காவிட்டால் பெப்ரவரி 16 இல் நடக்கவிருக்கும் சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பிற்போடப்படும் என்று உதவி வழங்கும் நாடுகள் எச்சரித்துள்ளன.

சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவது சர்வ சாதாரணமான நிகழ்வாகும். ஒருவர் வானொலியைக் கேட்கும்போது அல்லது தொலைக்காட்சியைப் பார்க்கும்போது தனது மனித உரிமை மீறப்படுவதை அவதானிக்காமல். காரணம் தொடர்புச் சாதனங்கள் மக்களுக்கு உண்மையைத் தெரிவிப்பதில்லை.

ஒருவரின் மனித உரிமைகள் மீறப்படும்போது அயலிலுள்ளவர்கள் பார்வையாளராக இருக்கமுடியாது நாளைக்கு அவருக்கும் இதே நிலைதான் ஏற்படும். சிறிலங்காவில் எவருக்கும் பாதுகாப்புக் கிடையாது ஐ. தே. கட்சியின் கட்டளைக்கு நரசபை உறுப்பினர் லக்ஷ்மன் பெரேராவும் ரிச்சேட் டி. சொய்சா கொலை செய்யப்பட்டதும் தெரிந்ததே இவ்வாறு அத்துலத்முதலி தெரிவித்தார்.

# பதவி விலகப் போவதில்லை; கொர்பசேவ் அறிவிப்பு

(மாஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தான் உடனடியாக பதவி விலகப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

நிலைமை தனது கட்டுப்பாட்டை மீறிப் போகவில்லை என்றும், இனிமேலும் மீறிப் போகாதென்றும், ஜனாதிபதி என்ற முறையிலும் முப்படைகளின் தலைமைத் தளபதி என்ற முறையிலும் தமக்குள்ள எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்தப் போவதாக கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மாறுதல் காலத்தில் சோவியத் யூனியனை வழி நடத்தும் முக்கியமான பொறுப்பை தொடர்ந்துநிறைவேற்றப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

'ரஷ்யத் தலைவர் போரிஸ் எல்சின் சுதந்திரம் பெற்ற நாடுகளின் பொதுநலவாய அமைப்பைக் கையாளும் விதம் குறித்தும் கொர்பசேவ் அதிருப்தி தெரிவித்தார்.

மாறுதல் என்பது அரசியல் சாசன விதிப்படி இயல்பாக நிகழ வேண்டுமென்றும், சோவியத் யூனியனின் அணுவாயுதங்கள் தமது கட்டுப்பாட்டிலேயே இருக்கும் என்றும், 'சோவியத் யூனியன் என்ற நாடே இனி இல்லை' என்று அண்மையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் கூறியிருப்பதை தான் கண்டிப்பதாகவும் கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

### சமுகந் தரவும்

யாழ்ப்பாணம் வடக்கிலுள்ள சலப நோ. கூ. சங்கம், தென்கு வளம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம், மற்றும் இரண்டாம்படி சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் அனைவரையும் நாளை செவ்வாய் முற்பகல் 11.00 மணிக்கு யாழ். கூட்டுறவு சபை மண்டபத்திற்கு வருகை தருமாறு யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றார்கள்.

# சீனாவின் ஒரு பகுதியாகவே திபெத் இருந்து வந்தது -லீ பெங்

(டில்லி)

முற்காலத்திலிருந்தே திபெத், சீனாவின் ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளது. தொடர்ந்தும் அவ்வாறே இருக்கும் என்று சீனப் பிரதமர் லீ பெங் புதுடில்லியில் நேற்று செய்தியாளர்களிடையே பேசும் போது தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்; இவ்விடயத்தில் இந்தியா கடைப் பிடித்து வரும் நிலையையும் பாராட்டினர்.

இந்திய - சீனப் பிரதமர்கள் நடத்திய இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களில் இரு நாடுகளுக்குமிடையிலான எல்லைப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண்பது எனவும், இரு நாடுகளின் இராணுவ தளபதிகளும் அடிக்கடி சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவது எனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான நீண்ட எல்லைப் புறத்தில் சமாதானமும், அமைதியும் நிலவ வேண்டுமென இந்தப் பேச்சுக்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது புதுடில்லியில் முன்னாள் பிரதம அமைச்சர் வி. பி. சிங் மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் சரத்யாதவ் ஆகியோரையும் சந்தித்துப் பேசிய சீனப் பிரதமர் அவர்களிடையே பேசுகையில் திபெத்திற்கு சுதந்திரம் வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை எனவும், எனினும் திபெத்தின் ஏனைய பிரச்சினைகள் பற்றி தலாய்லாமாவுடன் பேச்சு நடத்தலாம் எனவும் குறிப்பிட்டார்.

**கப்பல்**

பிரயாணம் செய்தனர். சுமார் 500 பேர் மூழ்கியதாக நம்பப்படுகிறது 160 பேர் மீட்கப்பட்டனர். மிகுதிப் பேரைத் தேடும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன.

மூழ்கியவர்கள் எந்த நாட்டுப் பிரஜைகள் என்பதை எகிப்து இதுவரை ஊர்ஜிதம் செய்யவில்லை

**குடாநாட்டில்**

[illegible] தோற்றுவிப்பதும் அரசாங்கத்தின் கடமையே என்பதையும் வலியுறுத்தினர்.

தென்னிலங்கைப் பகுதிகளில் சிறிலங்கா அரசாங்கம் இங்கு மேற்கொள்ளும் அடக்குமுறை நடவடிக்கைகள் பற்றி பிரச்சாரப் படுத்தும் படியும் விடுதலைப்புலிகள் தூதுக்குழுவினரிடம் கேட்டுக் கொண்டனர்.

**வன்முறைக்கு**

துவதாகவும் ஜெயலலிதா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் சீனப் பிரதமர் வருகையால் தான் பிரதமர் பி. வி. நரசிம்மராவுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள இயலவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கர்நாடக மாநிலத்தில் வெள்ளியன்று இடம்பெற்ற பந்த் பலாத்காரத்தில் இறங்கியதால் அது தோல்வியில் முடிந்தது என்று கர்நாடக மாநில இந்திரா காங்கிரஸ் செயலாளர் அனந்த கிருஷ்ணன் நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார். வன்செயல்கள் குறித்து உடனடியாக ஓர் நீதி விசாரணையை மேற்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ. தே. கட்சி வருமானவரி செலுத்துகின்றதாம்

ஐ. தே. க. யில் இன்று வரை 35 லட்சம் அங்கத்தவர்கள் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளார்கள் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

சிறிகோத்தாவில் உரையாற்றிய போது பிரேமதாசா இதனைத் தெரிவித்தார். இந்த ஆண்டிலிருந்து அங்கத்தவர் சந்தாப்பணம் செலுத்தி அங்கத்துவம் செலுத்தாவிட்டால் அவர்களுக்கு எந்தவித அதிகாரங்களோ தலையீடுகளோ பங்களிப்புச் செய்வதற்கு இடம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வருமானவரி செலுத்தும் ஓர் அரசியல் கட்சியாகவும் ஐ. தே. க. விளங்குகின்றது என்றும், இதனை தான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

## சிறிமாபேச்சில் தடுமாற்றம்; தினகரன் தகவல்

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும் போது அவரது பேச்சில் சிறிது தடுமாற்றம் காணப்பட்டதென "தினகரன்" செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை உடல்நலம் குன்றி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டது தெரிந்ததே. இவரை கொழும்பில் உள்ள பெரியாஸ்பத்திரியின் மூளை நரம்பு பிரிவில் அனுமதித்துள்ளார்கள் என்றும் தினகரன் தெரிவித்துள்ளது.

## ஆகஸ்ட் மாத நடவடிக்கை; விசாரிக்க ஆணைக்குழு

சிறிலங்கா அரசாங்கத்தை நிலைகுலையச் செய்வதற்கு கடந்த ஆகஸ்ட் மாதம் எதிர்க்கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல்வேறு அரசியல் பிரமுகர்களின் ஊழல் நடவடிக்கை பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காகவே இந்தக்குழு நியமிக்கப்படவிருப்பதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவீரர் பெற்றோரை கௌரவப்படுத்தும்நிகழ்ச்சி

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவும் மாவீரர் பெற்றோரை கௌரவப்படுத்தும் வைபவமும் இன்று மாலை ஐந்து மணிக்கு நாகர்கோவில் வடக்கில் இடம்பெற உள்ளன.

இந்த வைபவத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலர் உரை ஆற்ற இருக்கின்றனர்.

## நீதி மன்றப் பணத்தில் பதிவாளர் மோசடி

கண்டி நீதிமன்றத்தின் பதிவாளரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நீதி மன்றத்தின் பாதுகாப்பிலிருந்து ரூபா ஆறு லட்சத்துக்கும் அதிகமான பணத்தை இவர் கையாடியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குற்றத் தடுப்பு பொலிஸார் பதிவாளரிடமிருந்து 6,12,000 ரூபா பணத்தை மீட்டுள்ளனர். இது தொடர்பாக லிகிதரவில் மற்றுமொருவர் கைதாகியுள்ளார்.

## சோவியத்அணு ஆயுதங்கள்; ஒழிக்க அமெரிக்கா உதவி

சோவியத் யூனியனின் அணு ஆயுதங்களை அழிப்பதற்கு அமெரிக்கா உதவி செய்யுமென அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக்ஜெனி அறிவித்துள்ளார்

'நேட்டோ' அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் மத்தியிலான கூட்டத்தில் உரையாற்றும் போதே டிக்ஜெனி இதனைத் தெரிவித்தார். அமெரிக்காவின் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து ஐம்பது கோடி டொலர் செலவிடப்படும் எனவும், இந்த ஐம்பது கோடி டொலர்களில் பத்துக் கோடி டொலர் மனிதாபிமான உதவிக்காக பயன்படுத்தப்படும் என்றும் டிக்ஜெனி கூறியுள்ளார்.

## சோவியத் இராணுவம் பலமானநிலையில் இல்லை

அமெரிக்க தூதுவர்

கிரெம்ளினின் மத்திய கட்டுப்பாட்டை மீறிப் பொருளாதார சமூதாய அரசியல் எதிர்ப்புக்கள் காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்தக் கூடியதாக சோவியத் இராணுவம் காணப்படவில்லை என மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஸ்ரவ்ஸ் தெரிவித்துள்ளார்

சோவியத் யூனியனில் பயங்கரமான கிரமமற்ற நிலை காணப்படுகின்றது என்றும் இதன்மூலம் உள்நாட்டுப் பூசல்கள் தலைதூக்கலாமென அமெரிக்க சி. ஐ. ஏ. தலைவர் ரொபர்ட் கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.